**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திம் - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென கருதுகின்ற எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, பணியகத்தின் நிதிக்கூற்றுகள் ஊடாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் (இ.க.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் எனது பொறுப்பு இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,பணியகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பணியகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பணியகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பணியகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பணியகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு,

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பணியகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பணியகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுகளை தயாரித்தல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 நிதிக்கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை பணியகத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமத்துடன் தொடர்புடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்றினால் நியமம் ஒன்றின் மூலம் தேவைப்படும் அல்லது அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் போது தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடு செய்யப்பட முடியாத போதும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைக் கணக்கில் காணப்பட்ட ரூபா 25,932,669 ஆன பாதகமான மீதி காசு மற்றும் காசுக்கு சமமானவற்றிலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் | நிதிய முகாமைத்துவ கணக்கில் உள்ள மீதி மூலம் இக் கணக்கு மேவுகை செய்யப்படுவதால் ஒரே கணக்கில் காணப்படும் நிதியத்தை அடிப்படையாக கொண்டு குறித்த மீதி உருவாகியுள்ளது. ஆதலால் காசு மற்றும் காசுக்கு சமமானவற்றின் பெறுமதி குறைத்து காண்பித்தல் இடம்பெறவில்லை யென்பதாக | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மற்றும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட உருப்படிகளின் உள்ளவாறான மற்றும் நியாயமான பெறுமதியை காண்பிக்கும் வகையில் நிதிக் கூற்றக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதியும் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 60 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் வேறாக காண்பிக்க வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வட்டி வருமானம் ரூபா 2,089,671,823 மற்றும் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 21,038,312,191 தொகை நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களாக வேறாக காண்பிக்காமல் மொத்தம் ரூபா 23,127,984,014 ஆன நிலையான வைப்புக்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. | பெறவேண்டிய வட்டி வருமானம் நிதிச் சொத்துக்களின் பகுதியொன்றாக இருந்ததுடன் ஏனைய பெறவேண்டிய வருமானம் ஒன்றல்ல, ஆதலால் முன்னைய அனைத்து ஆண்டுகளினதும் இந்த வகையில் நிதிச் சொத்துக்களின் பகுதியாக பெறவேண்டிய வட்டி வருமானமாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பணியகத்தினால் சரியான கணக்குகளில் காண்பித்தல் இடம்பெற்றுள்ளதாக | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் வெவ்வேறாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 7 இன் 28 ஆம் பந்தியின் பிரகாரம் வெளிநாட்டு பிரயோக பணத்தின் அந்நியச் செலாவணி விகிதத்தின் மாற்றங்களால் உருவாகிய தீர்வையாகாத சேதங்கள் மற்றும் நன்மைகள் மாத்திரம் காசுப்பாச்சல் கூற்றில் இனங் காணப்பட வேண்டிய போதிலும் பணியகத்தினால் தொழிற்பாட்டு செயற்பாடுகளில் உருவாகிய காசு பாய்ச்சலைக் கணக்கீடு செய்யும் போது தீர்வையாகாத அந்நியச் செலாவணிப் பரிமாற்றல் இலாபம் உட்பட்ட மொத்த அந்நியச் செலவு பரிமாற்றல் இலாபம் (exchange gain) ரூபா 1,606,547 1,606,547,459 தொகை வரிக்கு முன்னரான இலாபத்திற்கு சீராக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்ட அவதானிப்புகளைச் சீராக்கி காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது தீர்வையாகாத அந்நியச் செலாவணிப் பரிமாற்றல் இலாபத்தை மாத்திரம் வரிக்கு முன்னர் இலாபத்துக்கு சீராக்கும் செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் உருவாகிய காசு பாய்ச்சல் தொழிப்படும் மூலதன மாற்றங்கள் சீராக்கத்தின் போது நிதி நிலைமை கூற்றில் ஏனைய கடன் கொடுத்தோரில் | சுட்டிக்காட்டப்பட்ட அவதானிப்புகளை சீராக்கி காசு பாய்ச்சல் கூற்றினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | காசு பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது தொழப்படும் மூலதனம் மாற்றங்கள் இனம் காணப்பட்டு சரியாக சீராக்கம் |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்படாத ரூபா 209,375,755 சீராக்கப்பட்டு இருந்தது. | | செய்யப்பட வேண்டும். |
| (உ) | காசு பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் முதலீடு கொள்வனவு மற்றும் விற்பனை காசு வெளிப்பாய்ச்சல் மற்றும் காசு உட்பாய்ச்சலாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் முதலீடு செய்யப்பட்ட ஆண்டின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகளுக்கு இடையே வேறுபாடுகள் காண்பிக்கப்பட்டு இருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட அவதானிப்புகளை சீராக்கி காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | ஆண்டில் காசாக இடம் பெற்ற உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சல் திட்டவட்டமாக இனங் காணப்பட்டு காசுப் பாய்ச்சல் கூற்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை கணக்கு நியமம் 12 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் அறிக்கையிடல் காலப்பகுதி இறுதியில் வரி இணக்கப்பாட்டின் விகிதத்தின் பிரகாரம் பிற்போடப்பட்ட வரி கணக்கிடாமை காரணமாக நிதிநிலைமை கூற்றில் பிற்பேர்ப்பட்ட வரி சொத்துக்கள் ரூபா 4,010,206 குறைத்து காண்பிக்கப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம் ஆண்டுக்குரிய வருமான வரி ரூபா 1,700,711,809 ஆக இருந்த போதும் கணக்கிடப்பட்ட வரிப் பெறுமதி ரூபா 1,704,722,015 ஆக இருந்தது. | இது நடப்பாண்டின் வரி ஒதுக்கீட்டு தவறு ஒன்றாக இருந்ததுடன் அதனை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு எதிர்பார்ப்பதாக | குறித்த வரி விகிதம் சரியாக இனங்காணப் பட்டு பிற்போடப்பட்ட வரிப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (எ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் உருப்படிக்காக ஒவ்வொரு 03 ஆண்டுகளுக்கோ அல்லது 05 ஆண்டுக்கு ஒரு முறை மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பணியாகத்தினால் 2010 ஆம் ஆண்டின் பின்னர் சொத்துக்கள் தொடர்பாக மீள் மதிப்பீடு ஒன்று செய்யப்படாததால் நிலையான சொத்துக்களின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுகளில் மூலம் நிருபணமாக்கப்பட்டிருக்க வில்லை. | சொத்துக்கள் மீள் மதிப்பீடு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றின் மூலம் மேற்கொள்வதற்காக பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு பெறுகை நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்களில் சொத்துக்களுக்காக நியாயமான பெறுமதி ஒன்று காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஏ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்துக்கள் தொடர்பாக எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள | மேற்படி மீள்மதிப்பீட்டின் பின்னர் குறித்த கணக்கீட்டு சீராக்கத்தை மேற்கொள்வதற்கு | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க பணியகத்திற்கு சொந்தமான |

| | | |
|---|---|---|
| ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 1262.16 மில்லியனான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அதன் பிரகாரம் சொத்துக்களின் செயற்திறனான ஆயட்காலம் தொடர்பாக மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மீள் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்ப்பதாக | சொத்துக்களின் சரியான பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புலம்பெயர் தொழிலாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை சான்றிதழ்களை (NVQ) அச்சிடுவதற்காக 2017 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய மூன்றாம் மற்றும் தொழிற்கல்வி ஆனைக்குழுவிற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,846,025 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | இது 2023 ஆம் ஆண்டிற்கான கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக | பொறுப்புக்கள் குறித்த ஆண்டில் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்த தொகையாக ரூபா 44,490,054 தொகையாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் பெறுகை பிரிவில் உள்ள அட்டவணையின் பிரகாரம் அம்மீதி ரூபா 3,172,467 ஆக இருந்ததால் நிறுத்தி வைத்த தொகை ரூபா 41,317,857 கூடுதலாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டு இருந்தது. | கூடுதலாக காண்பிக்கப்பட்டுள்ள நிறுத்தி வைத்தல் 2023 ஆம் ஆண்டில் கணக்கின் மூலம் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக | நிறுத்தி வைத்தல் தொகை சரியாக இனங் காணப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும் |
| (இ) | தொழிலாளர் நலன்புரி நிதியத்திற்கும் குவைத் இழப்பீட்டு நிதியத்திற்கும் உரிய நிலையான வைப்புகள் முதிர்வடையும் போதும் மீண்டும் | பணியகத்தினால் கணக்கீடு செய்யப்பட்டுள்ள அந்நியச் செலாவணி பரிமாற்றல் இலாபம் சரியானதாகும். | குறித்த திகதிகளில் காணப்பட்ட அன்னியச் செலாவணி பரிமாற்றல் விகிதத்தினை அடிப்படையாகக் |

| | | | |
|---|---|---|---|
| | முதலீடு செய்யும் போதும் அத்திகதியில் காணப்பட்ட அந்நியச் செலாவணி வீதத்தின் பிரகாரம் அந்நியச் செலவு பரிமாற்றல் இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படாமை காரணமாக மீளாய்வாண்டின் அந்நியச் செலாவணி பரிமாற்றல் இலாபம் ரூபா 5,581,297 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இதன் காரணமாக மீளாய்வாண்டின் மிகையும் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டு இருந்தது. | | கொண்டு இலாபம் அல்லது நட்டம் கணக்கிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு வெளிநாடு சென்றுள்ள தொழிலாளர்களுக்காக இலவசமாக வழங்கப்படும் காப்பறுதிக்காக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துடன் மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் நிர்வாக செலவினமாக 15 சதவீத தரகு பணம் ஒன்று பணியகத்துக்கு பெறவேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 444,490,978 ஆன தவணைத் தொகையில் மேலும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து பெற வேண்டிய ரூபா 60,267,876 ஆன தரகுபணம் கணக்கீடு செய்யப்படாமை காரணமாக ஆண்டின் வருமானம் மற்றும் பெற வேண்டிய வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2002 ஆம் ஆண்டிற்குரிய பெறவேண்டிய தரகு பணம் காப்புறுதி கம்பெனியால் 2023.07.05 ஆந் திகதியே உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. ஆதலால் நிதிக்கூற்றுகளில் வருமானமாகவும் பெற வேண்டிய வருமானமாகவும் அதனை காண்பிக்கவில்லை என்பதாக | பணியகத்தின் வருமானங்கள் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (உ) | 2020 ஆம் ஆண்டின் போது குவைத்தில் சேவை புரிந்த 14 புலம்பெயர் தொழிலாளர்களின் வெளிநாட்டு விமான பிரயாணக் கட்டணங்களாக பணியகத்தினால் செலவிடப்பட்ட ரூபா 2,951,091 தொகை 2021 ஆம் ஆண்டின் போது கல்ப் காப்புறுதி கம்பெனியிடம் இருந்து மீள் நிரப்பும் போது திரட்டு நிதியத்திற்கு | 2021.08.31 ஆம் திகதியில் உள்ளவாறு குவைத் தூதரக அலுவலகத்தில் நலன்புரி பிரிவுக்கு 04 காசோலைகளில் மூலம் கிடைத்த 2488 குவைத் தீனார் (அத்திகதியில் பெறுமதி ரூபா 1,737,256.95) தொகை பணியகத்தினால் 14 பேருக்காக செலவிடப்பட்ட | தூதரகங்களுக்காக பணம் சேகரிக்கும் போது குறித்த காலப் பகுதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சீராக்கப்பட்டமைக்காக செலுத்த வேண்டியதாக நிதிநிலை கூற்றில் காண்பிக்கப்பட்டு இருந்தது. | விமான டிக்கெட் கட்டணங்கள் மீள் நிரப்புவதற்காக GIC காப்புறுதி கம்பெனியிடமிருந்து உரித்தானதாக | |
| (ஊ) | நிதி நிலைமை கூற்றில் நலன்புரி நிதியத்தில் இருந்து செலுத்த வேண்டிய மீதி தற்போது செலுத்தப்பட்டுள்ள ரூபா 3,708,962 தொகை அழைப்பு வைப்புக்களில் உள்ளடக்கப்பட்ட தால் அட்டுறு மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகள் அந்த அளவினால் கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | கணக்கீட்டு பிழையை சீராக்குவதற்கு வெளிநாட்டு உறவுகள் பிரிவுடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | கணக்கீட்டு தவறுகள் சீராக்கப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்காத சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வெளிநாட்டு தொழில் முகவர் நிறுவனங்களுக் காக செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதிகள் (1576 இற்குரிய) | 376,748,580 | மீதிகளை உறுதிப்படுத் தும் கடிதங்கள் | 20122022.09.30 ஆம் திகதியில் உள்ளவாறு மீதி உறுதிப்படுத்தும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | ஒவ்வொரு ஆண்டிலும் காணப்படும் மீதியை உறுதிப்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்து வரும் பெற வேண்டிய | 1,000,000 | வைப்புகளுக் குரிய சான்றிதழ்கள் | குறித்த தரப்பினரால் இம் மீதி தொடர்பாக விபரங்களை தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை எனினும் குறித்த மீதி இதுவரை பெறவேண்டிய மீதி ஒன்றாக நிதி கூற்றுகளில் பேணிச் செல்லப்பட்டுள்ளன எதிர்காலத்தில் மீண்டும் இம் மீதியை தீர்வு செய்தல் தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | குறித்த தரப்பினரிடம் இருந்து மீதிகளை உறுதிப்படுத்த லொன்றை பெற்று கணக்குகளை சீராக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | பொது திறைசேரியிடமி ருந்து பெற வேண்டிய மீதி | 869,955,802 | மீதி உறுதிப்படுத் தும் கடிதம் | | |
| (ஈ) | நலன்புரி நிதியத்தின் மூலம் பணியகத்துக்கு பெற வேண்டிய மீதி | 1,512,657,528 | பெறுவனவுக ளுக்குரிய அட்டவணைக ளும் மீதி உறுதிப்படுத் தல்களும் | பணியகத்தின் ஆரம்பம் முதல் நலன்புரி நிதியத்திற்காக தேவையான சந்தர்ப்பங்களில் பணியகத்தின் நிதியத்தினால் பணத்தை அனுப்பியுள்ளதுடன் நலன்புரி நிதியத்தினால் பணியகத்திற்கு தீர்வு செய்யாத மீதியாக மேற்குறித்த | தொழிலாளர் நலன்புரிக்காக மாத்திரம் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் திட்டவட்டமாக இனங்கண்டு |

| | | | |
|---|---|---|---|
| | | தொகையை குறிப்பிடலாம் | கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேணஷ்டிய கணக்குகள்**

**1.6 செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரரிய பணியகத்தின் விசேட புலனாய்வு பிரிவிற்கு கிடைத்த முறைப்பாடுகள் புலனாய்வின் பின்னர் முறைப்பாட்டாளர்களுக்கு கொடுப்பணவு செய்வதற்காக பணத்தை மோசடி செய்த நபர்களிடமிருந்தும் தொழில் முகவர் நிலையங்களிடமிருந்தும் அறவிடப்பட்ட ரூபா 21,649,779 தொகை ஒன்று முறைபாட்டாளர்களுக்கு செலுத்தப்படாமல் பணியகத்தின் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் 2 ஆண்டுகள் முதல் 9 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் இருந்து வரும் ரூபா 20,079,603 ஆன மீதி ஒன்றும் காணப்பட்டது. இப்பணம் கிடைத்தள்ளதாக முறைப்பாடாளர்களுக்கு அறிவிக்கப்படாமல் முறைப்பாட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யாமல் கோவைகள் மூடப்பட்டமை இதற்கு காரணம் என கனக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது | இப்பணத்தை குறித்த முறைபாட்டாளர்களின் முறைப்பாடுகள் தீர்வு செய்யப்பட்டதன் பின்னர் செலுத்த வேண்டிய மீதி ஒன்றாக கணக்குகளில் வைக்கப்பட்டுள்ளன மேற்படி மீதிகக்களுக்கிடையே 2018 ஆம் ஆண்டு வரை தீர்வு செய்யப்படாத மீதிகள் 2023 ஆம் ஆண்டில் வருமானத்திற்கு எடுப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது ஏனைய மீதிகளை தீர்வு செய்வதற்கு புலனாய்வுப் பிரிவுடன் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக | குறித்த முறைப்பாடுகள் தீர்வு செய்யப்பட்டவுடன் அவற்றை அறவிட்டு பணத்தை குறித்த முறைப்பாட்டாளர்களுக்கு செலுத்துவதற்கு உரிய முறை ஒன்று தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மரணித்த 157 புலம்பெயர் தொழிலாளர்களுக்கு மரண இழப்பீடாக இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா 47,995,092 தொகையை அவர்களுக்கு கொடுப்பனவு செய்யாமல் நலன்புரி நிதியத்தில் செலுத்த வேண்டியதாக காண்பிக்கப் பட்டிருந்தது. மேலும் கணக்குப் பிரிவு மற்றும் நலன்புரி பிரிவுக்கு | கருத்து தெரிவிக்க வில்லை | மரண இழப்பீட்டுக் கோவைகள் முறையாக பேணி செல்லப்பட வேண்டும் அத்துடன் தேவையான ஆவணங்கள் தொடர்பாக இழப்பீட்டு முறைப்பாட்டாளர்கள் முறையாக அறிவுறுத்தப்பட வேண்டியதுடன் காப்புறுதி இழப்பீடு கிடைத்தவுடன் அந்த இழப்பீட்டுத் |

| | | | |
|---|---|---|---|
| | இடையே கூட்டிணைப்பு ஒன்று இல்லாமை காரணமாக 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய கணக்கு பிரிவிற்கு கிடைத்திருந்த 81 உரித்து கோரல்களுக்காக ரூபா 22,539,765 இற்குரிய தகவல்கள் நலன்புரி பிரிவிடம் இல்லாதிருந்ததுடன் நலன்புரி பிரிவுக்கு கிடைத்திருந்த 09 மரண இழப்பீட்டுக்காக ரூபா 4,282,435 இற்குரிய தகவல்கள் கணக்கு பிரிவில் காணப்படவில்லை. | | தொகையை செலுத்தி பூர்த்தி செய்வதற்கு முறையான வேலை திட்டம் ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | பாதுகாப்பு இல்லங்களில் தொழிலாளர்களை பொறுப்பேற்கும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு சொந்தமான மற்றும் அவர்கள் சேவை புரிந்த வீடுகளில் இருந்து கிடைக்கும் பணம் பாதுகாப்பு கணக்கில் (Safe Account Deposit) வைப்புச் செய்யப்பட்டு இலங்கைக்கு வந்ததன் பின்னர் அவற்றை கொடுப்பனவு செய்ய வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இவ்வாறு 81,728,897 மீதி ஒன்று செலுத்தப்படாமல் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தது. | 2022.12.31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதிகளாக கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 81,728,897 தொகை இறுதி கணக்குகளுடன் இணங்குவதாக | இப்பணத்தை வருமானத்துக்கு எடுப்பதற்கு முன்னர் குறித்த தரப்பினர் அறிவுறுத்தப்பட்டு கொடுப்பனவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | தென்கொரியாவில் விபத்துக்கு உட்பட் தொழிலாளர் ஒருவர் விபத்துக்குட்பட்டு இலங்கைகு அழைத்து வருவதற்காக 2019 நவம்பர் 08 ஆந் திகதி பணியகத்திற்கு வைப்புச் செய்யப்பட்டிருந்த தொகையில் செலவிடப்படாதிருந்த சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 1,451,490 தொகை மீண்டும் அவர்களுக்கு செலுத்த வேண்டிய போதிலும் 3 ஆண்டுகள் கடந்திருந்த போதும் அத்தொகையை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை தெரிவிக்கவில்லை. | இத்தொகை செலுத்த வேண்டிய குறுங்காலத்தில் செலுத்தி பூர்த்தி செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**1.6.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1985 இன் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரச் சட்டம் | | | |
| (i) 17(2) பிரிவு மற்றும் 45(2) பிரிவுகள் | சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பணியகத்தின் நிதியத்திற்கு சேகரிக்கப்பட வேண்டிய பணியகத்தின் வருமானங்கள் நலன்புரி நிதியத்திற்கு சேகரிக்கப்பட்டு இருந்ததுடன் மீளாய்வாண்டினுள் அவ்வருமானம் ரூபா. 3,494,022,254 ஆக இருந்தது. | பெண் புலம் பெயர் தொழிலாளர்களின் பாதுகாப்பு தொடர்பாக முறையான நடவடிக்கையொன்று பின்பற்றுதல் தேவைப்பாட்டின் பிரகாரம் 1988 யூன் 03 ஆந் திகதிய 98/783/32/017 ஆம் இலக்க அமைச்சரவை அங்கீகாரத்துடன் வெளிநாட்டு நலன்புரி நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழிலாளர் நலன்புரி நிதியத்திற்கு சேரும் வருமானம் மாத்திரம் அந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ii) 17(3) பிரிவு மற்றும் 48(1) பிரிவுகள் | சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் பணியகத்தின் நிதியத்தினால் செலுத்த வேண்டிய வெளிநாட்டு தூதரகங்களில் சேவைக்காக இணைக்கப்பட்டுள்ள பணியகத்தின் பதவியணிகளுக்கு உரிய சம்பளம் மற்றும் ஏனைய படிகள் ரூபா 684,351,761 தொகை தொழிலாளர் நலன்புரி நிதியத்தினால் செலவிடப்பட்டிருந்தது. | மேற்படி அமைச்சரவை தீர்மானம் மற்றும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சினால் வழங்கப்பட்ட 01/1999 ஆம் இலக்க கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் வருமான சேகரிப்பு மற்றும் செலவினம் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தொழிலாளர் நலன்புரி நிதியத்திற்கு சேரும் செலவினம் மாத்திரம் அந்நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2021 ஒக்தோபர் 14 மற்றும் 2022 பெப்ரவரி 10 ஆந் திகதிய பொது | சுற்றறிக்கைக்கு முரணாக 2002 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் அடிப்படையில் படிகளை உள்ளடக்கிய சம்பளத்தைக் போன்று 12 மடங்கினால் இடர் கடனாக செலுத்துவதற்கு பணியகத்தினால் | சட்டத்தின் 16.2 மற்றும் பிரகாரம் கிடைத்துள்ள அதிகாரத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் பதவியணிக்கு 1995.05.01 ஆம் திகதி முதல் இடர் கடன் வழங்கப் படுகின்றது. 2018.12.31 ஆம் தேதி வழங்கப் | பொது முயற்சிகள் திணைக்களத்தின் மூலம் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எல்லையை மிகைத்து கடன் வழங்குதலை மேற்கொள்ள முடியாதென |

| | | | | |
|---|---|---|---|---|
| | முயற்சிகள் திணைக்கள கடிதங்கள் | நடவடிக்கை எடுக்கப்பட்டு இருந்த காரணத்தால் மீளாய்வாண்டில் 525 உத்தியோகத்தர்களுக்கு எல்லையை மிகைத்து ரூபா 67,673,231 ஆன இடர்கடனாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் உடனடிக் கடனாக உத்தியோகத்தரின் மாதமொன்றுக்கு சமமான சம்பளம் 4.2 வட்டி வீதத்தில் 107 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்தம் ரூபா 3,826,900 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பட்டிருந்த 3/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையை அவ்வாறே அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்கு உரித்தாக்க கூடியதா என்பது தொடர்பாக விளக்கமொன்றை பெற்றுத் தருமாறு 2022.10.26 ஆம் திகதி பொது நிர்வாக அமைச்சுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | பணியகம் தெரியப்படுத்தப்பட்டு ள்ளதால் அதற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | தாபன விதிக்கோவையின் XLV(III) ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பிரிவு | பணியகத்தில் சேவை புரிந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு வந்த போதும் தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக வெளிநாட்டு தூதரகங்களில் அமைந்துள்ள நலன்புரி பிரிவின் சேவைகளுக்காக துபாய் மற்றும் குவைத் நாடுகளில் முறையே மதியுரை மற்றும் முதலாவது செயலாளர் பதவிக்காக 2021 ஆம் ஆண்டின் போது அவர்கள் ஆட்சேர்ப்புப் செய்யப்பட்டிருந்தனர். | குறித்த இரண்டு உத்தியோகத்தர்கள் தூதுவர் சேவைக்காக இணைக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு எதிராக எவ்வித ஒழுக்காற்று முறைப்பாடு காணப் படாமையால் அவர்கள் தூதுவர் சேவைக்காக இணைக்கப்பட்டனர். | காணப்படும் சட்டங்கள் விதிகள் சுற்றறிக்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தகைமையுடைய பதவியணியினரை முறைப்படி ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2020 சனவரி 14 ஆந் திகதிய 2020/01 ஆம் தலைவரின்இலக்க சுற்றறிக்கை | i. சுற்றறிக்கை நிபந்தனைகளை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு தூதரக சேவைக்காக பணியகத்தின் பதவியணியின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு இருந்த போதும் | 2018 ஆம் ஆண்டின் போது நேர்முகப் பரீட்சை குழு அங்கத்தவராக பெண் உத்தியோகத்தர் செயற்படவில்லை. 2018 ஆம் ஆண்டின் போது தெரிவு செய்யப்பட்ட குறித்து உத்தியோகத்தர் 2022.06.22 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த | ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுற்றறிக்கை நிபந்தனைகளை பூர்த்தி செய்யாதிருந்த நேர்முக சபையின் அங்கத்தவர் ஒருவராக செயற்பட்ட பணியகத்தின் உத்தியோகத்தர் துபாய் தூதரகத்தில் தொழிலாளர் நலன்புரி பிரிவில் மதியுறையாளர் பதவிக்காக நியமிக் கப்பட்டிருந்தார். | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் வெளிநாட்டு தூதுவர் சேவைக்காக இணைக்கப்பட்டிருந்தார் பணிப்பாளர் அங்கீகாரம் பெற்றுக் கொண்ட தினம் வரை முதலாவது தடவை தூதுவர் சேவையில் இருந்து இலங்கைக்கு வருகை தந்து 03 ஆண்டு காலத்தை பூர்த்தி செய்துள்ளதாக | |
| ii. | சுற்றறிக்கையின் பிரகாரம் விண்ணப்பிப்பதற்கு தேவைப்படும் குறைந்த வயதினைப் பூர்த்தி செய்யாமை மற்றும் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யாதிருந்த விண்ணப்பதாரர் ஒருவர் சிங்கப்பூர் தூதுவர் அலுவலகத்தில் நலன்புரி பிரிவின் மதியுரையாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். | சிங்கப்பூரில் இலங்கை உயர்ஸ்தானிகராலயம் மற்றும் நலன்புரி பிரிவின் மதியுரையாளர் பதவிக்காக தெரிவு செய்யப்பட்ட திரு.என்.எம். திப்புடுமுனுவ அப்பதவிக்காக இணைக்கப்பட்ட நியமனக் கடிதத் திகதி 2021.05.21) அவரின் குறைந்த வயதெல்லையை பூர்த்தி செய்திருந்ததாக | ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அபுதாபி தூதரத்தின் தொழிலாளர் நலன்புரி பிரிவில் பதவியணியின் உறுப்பினர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,149,7581149258 ஆன நிதி முறைகேடு மற்றும் பணியகத்தின் முகாமையாளர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3,638,368 ஆன முறைகேடு மேற்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டு இறுதி வரையில் 9 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்தவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டு பத்திரம் தயாரிக்கப்பட்டு கோவை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. திரு எஸ்.சுரேஷ்குமார் அவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட முறையான பரிசோதனை முடிவடைந்தன் பின்னர் பணியகத்தின் ஒழுக்காற்று அதிகாரியால் அப்பரிசோதனை அறிக்கையின் பரிந்துரையை கருத்தில் கொண்டு 2022.01.10 ஆம் திகதிய கடிதம் மூலம் பணியகத்திலிருந்து சேவை நீக்கம் செய்யப்பட்டார். அதன் பிரகாரம் அவரிடமிருந்து மேலும் ரூபா 3,638,368.10 தொகை அறவிடுவதற்கு உள்ளதால் அதனை அறவிடுவதற்காக | நிதி மோசடி தொடர்பாக ஆரம்ப பரிசோதனை ஒன்றும் முறையான ஒழுக்கற்று பரிசோதனை ஒன்றும் மேற்கொள்ளுதல் மிகவும் பலவீன மட்டத்தில் காணப்படுவதால் ஒழுக்காற்று பரிசோதனை நடவடிக்கைகளை |

| | | |
|---|---|---|
| | சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பணியகத்தின் சட்டப் பிரிவினால் 2023.02.23 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக | துரிதப்படுத்த வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக குழுமத்தின் மற்றும் பணியகத்தின் செயற்பாட்டு நிதிப் பெறுபேறு முறையே ரூபா 6,123,303,917 மற்றும் ரூபா 6,085,612,304 ஆன வரிக்குப் பின்னரான இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு ஒத்த முனைனை ஆண்டின் இலாபம் முறையே ரூபா 880,154,212 மற்றும் ரூபா 895,481,128 வரிக்குப் பின்னரான இலாபமாகும். அதற்கமைய குழுமத்தினதும் பணியகத்தினதும் நிதிப் பெறுபேறுகளில் முறையே ரூபா 5,243,149,705 ஆலும் ரூபா 5,190,131,176 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு தூதரக வருமானம், புலம்பெயர் தொழிலாளர் பதிவு வருமானம், செஸ் வரி வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமை மற்றும் அந்நியச் செலாவணி பரிமாற்றல் இலாபம் அதிகரித்தமை இந்த அதிகரிப்புக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 2.2 பிரதான பிரதான வருமானம் மற்றும் செலவின போக்கு பகுப்பாய்வு

(அ) 2021 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் வெளிநாடு செல்லல் 154 சதவீதத்தினால் அதிகரித்திருந்த காரணத்தினால் மீளாய்வாண்டில் தூதுவர் அலுவலகத்திலான பெறுவனவு வருமானம் ரூபா 2,730 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் அது மொத்த வருமானத்தில் 31.5 சதவீதமாக இருந்தது.

(ஆ) 2022 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 23,251 மில்லியன் மற்றும் ரூபா 10,603 மில்லியன் முதலீடு செய்யப்பட்டு முறையே ரூபா 1,859 மில்லியன் மற்றும் ரூபா 504 மில்லியனான வட்டி வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் அது மொத்த வருமானத்தில் முறையே 16 மற்றும் 17 சதவீதமாக இருந்தது

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | ஹோமாகம மற்றும் கஹகொல்லவில் அமைந்துள்ள காணி குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக முற்பணமாக ரூபா 46,000,000 மற்றும் ஏனைய செலவினங்களுக்காக ரூபா 1,719,680 என்ற வகையில் மொத்தம் ரூபா 47,719,684 செலவிடப்பட்டிருந்த போதும் குறித்த காணி விளைவற்ற வகையில் காணப்பட்ட காரணத்தினால் ஏனைய நிறுவனங்களினால் அக்காணில் மீண்டும் கையேப்பதற்கு நடவடிக்கை எடுத்து | கஹகொல்ல காணி தற்காலிக கொவிட் சிகிச்சை நிலையம் ஒன்றாக தாபிப்பதற்கு இலங்கை தரைப்படைக்கு வழங்கப்பட்டுள்ளது. செலுத்தப்பட்ட முற்பணத்தை காணியை கையளிப்பதற்கு முன்னர் மீளளிக்குமாறு அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு அறிவிக்குமாறு செயலாளர் தொலைத்தொடர்பு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் விளையாட்டு அமைச்சுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. 2010 | காணியை பணியகத்திற்கு கையேற்பதற்கோ அல்லது அல்லது செலுத்திய முற்பணத்தை மீண்டும் பெற்று பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வந்தபோதும் பணியத்தினால் செலுத்தப்பட்ட முற்பணத்தொகையை மீண்டும் அறவேடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை. | பெப்ரவரி 26 ஆம் திகதி 50 ஆண்டு காலப்பகுதிக்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டு குறித்த திகதியில் மதிப்பிடப்பட்ட குத்தகை பெறுமதியான ரூபா 52 மில்லியனில் ரூபா 26 மில்லியன் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக. | |
| (ஆ) | தங்கல்ல மற்றும் மத்துகம புலம்பெயர் வளங்கள் நிலையங்களில் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக முறையே ரூபா 302,112,904 தொகை மற்றும் ரூபா 153,656,495153686495 என செலவிடப்பட்டிருந்த போதும் காணிகளின் உரித்தினை சட்டரீதியாக கையேற்பதற்கு பணியகம் தவறி இருந்தது. | இக்காணியை அமைச்சுக்கு கைநேற்பதற்காக அமைச்சின் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி) இனால் மற்றும் 2021.02.01 ஆம் திகதிய MFE/CEV/ PL/03/01/02 ஆம் இலக்க டிதத்தின் மூலம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு மேம்படுத்தல் மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சுக்கு கையேற்பதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தங்கல்ல பிரதேச செயலாளருக்கு அறிவித்துள்ளதாக | காணியை கையேற்கும் நஹ1ஹ1டவடிக்ககளை துரிதப்படுத்தப்பட வேண்டும |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓமான் தூதரகத்தின் தொழிலாளர் நலன் பிரிவில் மூன்றாவது செயலாளராக செற்பட்ட உத்தியோகத்தினால் மேற்கொள்ளப்பட்ட முறைகேடு காரணமாக சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டு 2022 நவம்பர் 29 ஆம் திகதி இலங்கைக்கு வந்ததன் பின்னர் தகைமைகளை கொண்டுள்ள மூன்றாவது செயலாளர் ஒருவர் 2023 யூன் 20 ஆம் திகதி வரை நியமிக்கப்பட்டிருக்கவில்லை மேலும் அந்த தூதரகத்தின் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இல்ல உத்தியோகத்தினால் பாதுகாப்பு இல்லத்துக்குரிய | பாதுகாப்பு இல்ல காப்பாளருக்கு எதிராக உள்ள முறைப்பாட்டின் பிரகாரம் தூதுவரின் பரிந்துரை அடிப்படையில் அந்த உத்தியோகத்தரை விரைவில் இலங்கைக்கு அழைத்து வருவதற்காக அவருக்கு பதிலாக உத்தியோகத்தர் ஒருவரை பணியகத்தினால் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிய பாதுகாப்பு இல்ல காப்பாளர் உத்தியோகத்தர் 2023.07.02 ஆம் திகதி கடமையை பொறுப்பேற்றவுடன் அத்திகதி முதல் 14 நாட்கள் பூர்த்தி | தூதரகங்களின் சேவைக்காக பொருத்தமான பதவியணியினர் தெரிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோவைகளை பராமரிக்காமல் இருந்ததாக 2023 ஜனவரி 31 ஆம் திகதி தூதுவரால் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக வேறொரு உத்தியோகத்தரை நியமிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அடைந்ததன் பின்னர் இதுவரை சேவை புரிந்த பாதுகாப்பு இல்ல காப்பாளரை தலைமை அலுவலகத்திற்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து தலைவருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | |
| (ஆ) | வேலைவாய்ப்பு அனுமதிப் பத்திரம் முறைமையின் (Employment Permit System) கீழ் தென் கொரியாவிற்கு இலங்கை தொழிலாளர்களை அனுப்புவதற்கு உரியதாக அந்நாட்டின் அரசின் ஈடுபாட்டுடன் கைச்சாத்திடப் பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் காலம் 2019 செப்டம்பர் 29 ஆம் திகதி நிறைவடைந்து இருந்ததுடன் அந்த உடன்படிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை காலம் இரத்தாகி 06 மாதங்கள் கடந்துள்ள போதிலும் நியாயமான காரணம் ஒன்று இல்லாமல் நாளது வரையாக்குதல் தாமதம் அடைந்தால் அந்த உடன்படிக்கையை ரத்து செய்யும் அல்லது இடைநிறுத்தம் இயலுமை காணப்படுகின்றது. எவ்வாறாயினும் 2023 யூன் 27 ஆந் திகதி வரையிலும் உடன்படிக்கை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. இந்த உடன்படிக்கையின் கீழ் கடந்த 06 ஆண்டுகளில் 20,667 தொழிலாளர் தொழில் வாய்ப்புகளுக்கு அனுப்பும் செயற்பாடு பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அமைச்சரவையின் பரிந்துரை பிரகாரம் நாளது வரையக்கப்பட்ட புரிந்து உடன்படிக்கை தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் 2023.03.02 ஆம் திகதி சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபரின் பரிந்துரை தற்போது கிடைத்துள்ளதால் குறித்த பரிந்துரையை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டு கொரிய தரப்பினரின் இணக்கப் பாட்டை பெற்றுக் கொள்வதற்காக திருத்திய உடன்படிக்கை வெளிநாட்டு அலுவல் அமைச்சிற்கு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | இரண்டு நாடுகளுக்கிடையே செயற்படுத்தப்படும் இந்த தொழில் நிகழ்ச்சிகளுக்குரிய உடன்படிக்கைகளை நாளது வரையாக்கப்படல் தாமதத்திற்கான காரணங்கள் பரீட்சிக்கப்பட்டு விரைவில் அந் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் |
| (இ) | 1990 மட்டும் 1991 ஆம் ஆண்டுகளில் வளைகுடா யுத்தத்தில் தொழிலை இழந்தோருக்கு இழப்பீட்டை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகளின் இழப்பீட்டு ஆணைக்குழு இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்த இழப்பு | மேலும் கொடுப்பனவுக்காக 948 இழப்பீட்டாளர்கள் அளவில் காணப்படுவதுடன் செலுத்த வேண்டிய இழப்பீட்டுப் பெறுமதி ரூபா 251 மில்லியன் ஆகும். பல சந்தர்ப்பங்களில் பணியகத்தினால் பத்திரிகை | விண்ணப்பதாரிகள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அவர்களுக்கு விரைவில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்தில் இருந்து இழப்பீடு வழங்குதல் 1994 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த போதும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 948 பேருக்கு ரூபா 251,453,848 ஆன தொகை இழப்பீடு செலுத்த வேண்டியதாக காணப்பட்டது. இந்த இழப்பீட்டு நிதியம் நிலையான வைப்பாக முதலீடு செய்யப்பட்டு 1997 முதல் 2022 ஆம் வரையான காலப்பகுதிக்காக ரூபா 4,960,937,306 ஆன வருமானம் ஒன்று உழைக்கப்பட்டு இருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்நிதியம் ரூபா 5,212,391,154 ஆக இருந்தது. எனினும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இழப்பீடு செலுத்த வேண்டியவர்களுக்கு இந்த இழப்பீட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. | அறிவித்தல் மூலம் மற்றும் கடிதங்கள் மூலம் இழப்பீடு விண்ணப்பதாரிகள் அறிவுறுத்தப்பட்ட போதும் ஆட்களுக்கு இழப்பீட்டை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. நிராகரிக்கப்பட்ட இழப்பீட்டு விண்ணப்பதாரர்களுக்கு இடையே 1692 பேருக்காக இழப்பீடு செலுத்துவதற்கு 2002.09.25 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் பேரில் கொடுப்பனவு செய்யப்பட்டதாக | |
| (ஈ) | குவைத் இழப்பீட்டு நிதியத்திலிருந்து இழப்பீட்டை பெற்றுக் கொள்வதற்கு 2007 நவம்பர் 19 ஆம் திகதி புலம் பெயர் தொழிலாளரால் விண்ணப்பிக்கப்பட்டு அனைத்து ஆவணங்களும் இழப்பீட்டு கொடுப்பனவு பரிந்துரைக்கப்பட்ட குழுவின் மூலம் அங்கீகரிக்கப் பட்டிருக்கையில் மற்றும் 1991 ஆம் ஆண்டு குவைத் யுத்த சமயத்தில் குவைத்தில் சேவை புரிந்ததை உறுதிப்படுத்து வதற்காக சான்றுகள் உறுதிப் படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப் பட்டிருக்கையில் இழப்பீட்டைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பத்தை சமர்ப்பித்து மீளாய்வாண்டு வரை 15 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுத்து இருக்கவில்லை. | அந்த தொழிலாளி இழப்பீட்டை கோரியிருந்த காலம் குறித்த காலப் பகுதிக்குரியதாக அல்ல. ஆதலால் அவ்வாறான விண்ணப்பங்களுக்காக இந்நிதியத்தின் மூலம் கொடுப்பனவு செய்யும் இயலுமை இல்லை என்பதாக | பணியகத்தினால் பரிந்துரைக்கப்பட்ட பிரகாரம் இந்த விண்ணப்பதாரருக்கு இழப்பீடு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | பணியகத்திற்கு சொந்தமான ரூபா 397,366,435 பெறுமதி ஆன 07 நிலையான வைப்புகளை வங்கி பிணையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டு வீடமைப்பு | மத்திய வங்கியின் முகவரிடமிருந்தும் வர்த்தக வங்கிகளின் முகவர் களிடமிருந்தும் கருத்துரை களை பெற்றுக் கொண்டு புதிய கடன் முன்மொழி | தற்போது காணப்படும் வீடமைப்பு கடன் முன்மொழிவு முறைமை சுழற்சியாக செயல்படுத்துவதால் பணியகத்தின் |

| | | | |
|---|---|---|---|
| | கடன் முன்மொழிவு செயற்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் அதன் முன்னேற்றம் தொடர்பான தகவல்களஇ கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வொன்றை செயற்படுத்து வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது. குவைத் நிதியத்தின் மூலம் புலம்பெயர் தொழிலாளர் களின் நலனுக்காக வேலைத்திட்டம் ஒன்றை செயற்படுத்துமாறு பொது முயற்சிகளுக்கான செயற்குழுவின் போது வழங்கப்பட்ட பரிந்துரைகளை பின்பற்றி மேற்படி கடன் முன்மொழிவு முறைமை செயற்படுத்தப்பட்டுள்ளதாக | முகாமைத்துவத்தினால் அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து மீண்டும் செயற்படுத்தி புலம்பெயர் தொழிலாளருக்கு தேவையான நலன்புரி வசதிகளை வேழங்க வேண்டும். |
| (ஊ) | 2013 ஜனவரி 24 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை சமூர்த்தி அதிகாரசபையுடன் இணைந்து ரணவிரு வீடமைப்பு கடன் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துவதற்காக 5 ஆண்டுகளுக்கு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டு பணியகத்தினால் 2013 மார்ச் 08 ஆம் திகதி சமூர்த்தி அதிகாரசபைக்கு ரூபா 100,000,000 தொகை கொடுப்பனவு செய்யப் பட்டிருந்ததுடன் அப்பணம் சமூர்த்தி அதிகாசபையின் பெயரில் நிலையான வைப்பொன்றாக வைப்பு செய்யப்பட்டிருந்தது. புரிந்துணர்வு உடன்படிக்கையின் செல்லுபடிக் காலம் 2018 மார்ச் 07 ஆம் திகதி முடிவடைந்த போதும் செயற்திட்டத்தின் பிரகாரம் கடன் வழங்கல் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை வட்டி வருமானமொன்று கிடைத்திருக்கவில்லை. | ரணவிரு வீடமைப்பு செயற்திட்டம் தற்போது முடிவடைந்திருந்த போதும் புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. 2013/02/01 ஆந் திகதிய 130086/544/002 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தில் (இ) 38 (ii) இன் பிரகாரம் 100,000,000 தொகை சமுர்த்தி வங்கியில் வைப்பு செய்யப்பட்டிருந்தது. அவர்கள் அத்தொகையை நிலையான வைப்பொன்றாக முதலீடு செய்திருந்த போதும் பணியகத்தின் பேரில் முதலீடு செய்திருக்க வில்லை. எனினும் எமது வைப்புக்குரிய மீதிகளை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் ஒவ்வொரு ஆண்டிலும் பணியகத்திற்கு கிடைத்து வருகின்றது. | புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் இத்தொகை செயற்திட்டதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டியதுடன் குறித்த தொகையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2023 ஜனவரி 18 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழு கூட்டத்தின் போது வெளிநாட்டு தூதுவர்களுக்காக உத்தியோகத்தர்கள் தெரிவு | குறித்த நிதியத்தை பல்நோக்கு கடன் முன்மொழிவு ஒன்றை செயற்படுத்துவதற்காக அமைச்சரவைக்கு முன்மொழிவு | அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு தூதரங்களுக்காக உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கும் போது நடைமுறையில் |

| | | | |
|---|---|---|---|
| | செய்யும் நடைமுறை தொடர்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் முறையான நடைமுறை ஒன்றை தயாரிக்குமாறு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் 2023 ஜனவரி 17 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டு இருந்த நடைமுறையில் குறைபாடுகள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டு பணியகத்தினால் நிராகரிக்கப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் ஓய்வூதிய முறைமைக்காக குறித்த நிதியத்தை வைத்துக் கொள்ளுமாறு அமைச்சரவையால் 2023.04.2401.17 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பணியகத்தின் ஈடுபாட்டுடன் தற்போது சமூக பாதுகாப்பு சபை மூலம் புலம்பெயர் தொழிலாளர்களுக்காக ஓய்வூதிய முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது . | காணப்படுகின்ற குறைபாடுகளை சீராக்கி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் எடுத்தல் வேண்டும் |
| (ஏ) | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக சட்டத்தின் 15 (அ),(ஒ),(ஓ) பிரிவுகளின் பிரகாரம் அனைத்து தகவல்களுக்கு உள்ளடக்கப்பட்ட தரவு வங்கியொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை | பணியகத்தினால் தரவுத் முறைமையொன்று பேணிச் செல்லப்பட்டு வருவதாக. | தேவையான சந்தர்ப்பங்களின் போது குறித்த தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இயலுமான வகையில் புலம்பெயர் தொழிலாளர்களின் தகவல்கள் உள்ளடக்கப்பட்ட தரவுத் முறைமையொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |
| (ஐ) | 2015 முதல் 2022 காலப்பகுதியில் 04 அனுமதிப்பத்திர முகவர் நிறுவனங்கள் கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் அந்த முகவர் நிறவனங்களுக்கு மீண்டும் 315 முறைப்பாடுகள் கிடைத்திருந்த போதும் பணியகச் சட்டத்தின் 31(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் அனுமதிப்பத்திர முகவர் நிறுவனங்களை இரத்துச் செய்வதற்கு இயலுமாக இருந்த போதும் அம் முகவர் நிறுவனங்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்துரை தெரிவிக்கவில்லை. | கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த முகவர் நிறவனங்களின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 நிதிய முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தொழிலாளர் நலன்புரி நிதியத்தின் மூலம் முழுமையாக வலது குறைந்த தொழிலாளர்களுக்காக ரூபா ஒரு மில்லியன் பெறுமதியான வீடொன்று வீதம் அமைத்துக் கொடுப்பதற்காக 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ரூபா 9,600,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு 04 வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அதில் 03 வீடுகளின் வேலைகள் பூர்த்தி செய்யப்படா திருந்ததுடன் ரூபா 2,222,650 செலவிடப்பட்டிருந்தது. | தேசிய வீடமைப்பு அதிகார சபை மூலம் வீடமைப்பு நிர்மாணத்தின் போது தொடர்ச்சியான தாமதத்தினைக் கருத்தில் கொண்டு அவ்வீடுகளை மாவட்ட செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் உரிய பிரதேச செயலாளர்களின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட நடவடிக்கையின் பிரகாரம் 02 வீடுகள் அந்தந்த பிரதேச செயலாளர்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (வெளிநாட்டு சேவை) மற்றும் பணியகத்தின் சிரேஷ்ட முதன்மையாளர்களின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக | செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் பணியகத்தினால் நிதிக் கூற்றுக்கள் 52 நாட்கள் தாமதித்து 2023 ஏப்ரல் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகள் தயாரிக்கப்பட்டு முடிவடைந்ததன் பின்னர் நடத்தப்பட்ட முதலாவது பணிப்பாளர் சபைக் கூட்டம் நடைபெற்ற 2023.04.06 ஆம் திகதி இக்கணக்குகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் தேவையான ஆவணங்களுடன் 2023.04.21 ஆம் திகதி அரச கணக்காய்வுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |